பந்தபாச மற்றவர் பணிந்திடும் நமசிவாய
கூட்டநீறு பூசிக் கூடலை யாடிடும் நமசிவாய
கட்டறுத்து எமையாள் கலாதரா நமசிவாய
அந்திப்போதில் வந்திப்போர்க்கு அருள்தரும் நமசிவாய
திந்திதோ மென்றாடிடும் பொற்பாதனே நமசிவாய
அட்ட மூர்த்தியாய் அனைத்து மானவா நமசிவாய
மட்டவிழ் மலர் மணத்துள் வாழ்ந்திடும் நமசிவாய
இஷ்டபால துஷ்டகால ஈசனே நமசிவாய
இருடிகள் பணிந்து போற்றும் புருடனே நமசிவாய
முக்குணம் கடந்து நிற்கும் மூர்த்தியே நமசிவாய
துக்க சாகரம் கடக்கும் துரியனே நமசிவாய
முக்கண் ஈசனே முனிவர் போற்றிடும் நமசிவாய
ரஜத சைல வாச புஜக பூஷணா நமசிவாய
கஜ சர்ம்மாம் பரா கிரிஜ நாதனே நமசிவாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64 சிவ வடிவ வழிபாடு பலன்கள்

காலையில் தரிசிக்க நோய்கள் தீரும்
நண்பகலில் தரிசிக்க தனம் பெருகும்
மாலையில் தரிசிக்க பாவம் அகலும்
அர்த்த சாமத்தில் தரிசிக்க வீடபேறு கிடைக்கும்

## 01. ஸ்ரீலிங்க மூர்த்தி

லிங்கமூர்த்தி கோயில் பிரம்மகத்தி தோஷங்கள்
தங்காது தீர்க்கம் நலமாகும் - அங்கேதான்
வில்வ இலையோடு வெண்தயிர் பூசைசெய்தால்
நல்லன வாகுமாம் நாடு!

## 02. ஸ்ரீ லிங்கோத்பவ மூர்த்தி

லிங்கோற்பவ மூர்த்தி சிவபெருமான் ஆலயம்
தங்கிய குற்றத்தைத் தான் போக்கும் - அங்கே
அருணாச்சலேசுவரர் அண்ணா மலையை
கிரிவலம் வந்தால் சிறப்பு!

## 03. ஸ்ரீ முகலிங்க மூர்த்தி

முகலிங்க மூர்த்தியால் முன்விரோதம் போகும்
அகமகிழ நட்புடமை யாகும் - மிகுந்த
துயரமெல்லாம் தீரும் உயர்வாழ்வு கிட்டும்
செயமாகும் யாவும் சிறந்து!

## 04. ஸ்ரீ சதாசிவ மூர்த்தி

சதாசிவ மூர்த்தி தலம்சிதம்ப ரத்தில்
பதநடனப் பாதம் பணிந்தால் - அதனால்
மறுபிறப்பு இல்லை பல நன்மை யுண்டு
பலகீர்த்தி காணும் பலன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. ஸ்ரீ மகாசதாசிவ மூர்த்தி

மகாசதா மூர்த்தி மலர்ச்சிவ மூர்த்தி
சிகரமாம் காஞ்சி சிவனால் - அகலும்
கடும் காய்ச்சல் கும்பிட்டால் ஆரோக் யமாகும்
இடும்கருப் பஞ்சாற் றிளிப்பு!

## 06. ஸ்ரீ உமா மகேசுவர மூர்த்தி

குட்டநோய் தீர்க்கும் உமாமகேச மூர்த்தியால்
இட்டால் ஒருபிடிமண் இல்லத்தில் - கிட்டும்
தொழிலில் சிறப்பு குடும்பம் செழிக்கும்
எழிலாகும் இல்லம் நிறைந்து!

## 07. ஸ்ரீ சுகாசன மூர்த்தி

சுகாசன மூர்த்தியார் ரோதணியப்பர் கோயில்
சகதொழிலும் ஓங்கும் அருளும் - சிகரமாய்
திருஞான சம்பந்தர் சீர்காழி மண்ணின்
பெரும் ஞானம் பெற்ற இடம்!

## 08. ஸ்ரீ உமேச மூர்த்தி

குடும்பவாழ்வு கூடும் உமேசமூர்த்தி கோயில்
கொடுங்கடன் தீர்க்கும்! உயர்த்தும் - உடலும்
நலமோங்கிக் காணும் நைவேத்தியம் செய்தால்
குலம் செழிக்கும் உயர்ந்து!

## 09. ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தி

திருவாரூர் சோமாஸ் திருகந்த மூர்த்தி
தருவார் எழுத்தாள்மைக் கல்வி - குருத்தானம்
நல்ல உடல் வலிமை நாம் எழுதும் பண்திறன்
சொல்லறிவும் ஓங்கும் உயர்ந்து!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. ஸ்ரீ சந்திரசேகர மூர்த்தி

சந்திர சேகர மூர்த்தி தருவாராம்
முந்தும் நினைவாற்றல் முன்னோட்டம் - தந்திட
பித்தளை தங்க வைரமாம்! புகழோங்கும்
பித்தனின் தாள்பணிவோம் நின்று!

## 11. ஸ்ரீ இடபாரூட மூர்த்தி

சிவன் அருள்கிட்ட இடபாரூட்டானாம்
அவனிடம் சென்றால் அறிவாம் - தவமாம்
திருமந் திரத்தின் திருப்பொருள் காணும்
கருவாய் குழந்தையும் காண்!

## 12. ஸ்ரீ இடபாந்திக மூர்த்தி

இடபாந் திகமூர்த்தி வெண்தாமரைப் பூவான்
குடம்பசும் பாலில் குளிப்பார் - தடையாம்
குருதோஷம் நீங்கும் பொருளும் கொடுப்பார்
அருளாம் மறுபிறவி ஆம்!

## 13. ஸ்ரீ புஜங்கலளித மூர்த்தி

நீர்மலர் அர்ச்சனை தேன்பழம்பால் வார்ப்புகளால்
காலதோஷம் நீங்கும் தாள்வணங்கு - மூலன்
புசங்க லளிதமூர்த்தி போகடிப்பார் தோஷம்
இசைவாகும் நன்மையெல்லாம் வேண்டு!

## 14. ஸ்ரீ புஜங்கத்ராச மூர்த்தி

பாம்பாடை கொண்டான் பரம் புஜங்கமூர்த்தி
ஓம்நமச வாயவென்று ஓதுவோம் - ஆம் ஆம்
கடன் தொல்லை நீங்குமாம் ராகுதோஷம் போகும்
விடம்சர்ப்ப தோஷம் விலகு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. ஸ்ரீ சந்த்யாந்ருத்த மூர்த்தி

சந்த்யாந்ருத் தாமூர்த்தி கால்நடம் ஆடியதால்
அந்தப் பெயரும் ஆனதாம் - சிந்திட
பன்னீர் அபிஷேகம் பால்தேங்காய் பூசையால்
வென்றிடுவீர் பல்கலையை வெல்!

## 16. ஸ்ரீ சதா நிருத்த மூர்த்தி

சதாநிருத்த மூர்த்தி சிதம்பரத்தில் கூத்து
பதியாம் நடராசர் ஆவார் - பதிகக்
கவியாற்றத் தேர்கடகால் தடைநீங்க நட்பாய்
புவியாளக் காண்பார் புரிந்து!

## 17. ஸ்ரீ சண்டதாண்டவ மூர்த்தி

நடனம் பாட்டோடு நட்டுவாங்கம் ஓங்க
படமெடுக்கும் நாகநாதர் - சுடராக
தாண்டவ கோலத்தை தக்கோர்கள் கண்டிட
தாண்டவ மூர்த்தியானார் காண்!

## 18. ஸ்ரீ கங்காதர மூர்த்தி

கயிலையின் கங்கைநதி கங்காதர மூர்த்தி
உயர்ந்த இமய உயிர்நீர் - இயற்கையாம்
கங்கையை வீடெல்லாம் காணத் தெளித்தால்
எங்கும் செல்வம் நிறைவது!

## 19. ஸ்ரீ கங்கா விசர்ஜன மூர்த்தி

கங்கா விசர்ஜன கண்டிடும் மூர்த்தி
எங்கும் தெளித்திட்டால் ஏற்றமாம் - இங்குதான்
ஆறுமாதம் மூடுபனி ஆலயம் பின்திறக்கும்
பேறாகும் அந்தநீரால் பேண்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. ஸ்ரீ திரிபுராந்தக மூர்த்தி

முப்பரம் தீயெறித்த முக்கண்ணன் நாமமிது
இப்பெயர் அதனால் எழுந்தது - அப்பனால்
சூலைநோய் போகும் சூழ்ந்த பகைநீங்கும்
காலைப்பூப் போல் உடலும் காண்!

## 21. ஸ்ரீ கல்யாண சுந்தர மூர்த்தி

கல்யாண சுந்தரர்க்கு கட்டிய மல்லிகையும்
வெல்லமும் சர்க்கரையும் சேர்ந்த பொங்கல் -
சொல்லிவைத்தால்
கல்யாணம் காண நடந்திடும்!
தம்பதியர் இல்லறம் நல்லறமாம் சேர்ந்து!

## 22. ஸ்ரீ அர்த்தநாரீஸ்வர மூர்த்தி

அர்த்தநாரீசுவர் அர்ச்சனை வில்வதும்பை
இர்த்தல் திருச்செங்கோட் டாலயம் - அர்த்தமாய்
ஆண்பெண் சரிபாதி யாகவாழ்ந்தால் ஒற்றுமை
காண்பதாய் ஓங்கும் இல்லறம்!

## 23. ஸ்ரீ கஜயுக்த மூர்த்தி

கஜாசூரன் பாவியை கண்டழித்த தாலே
கஜயுக்தி மூர்த்தியானார் காண்க - நிஜமாய்
அருகம்புல் அர்ச்சனை ஆக்கசனி போகும்
வருவாம் குழந்தை வரம்!

## 24. ஸ்ரீ ஜ்வராபக்ன மூர்த்தி

சுவராபக்ன மூர்த்தி சுற்றிவந்து பார்த்தால்
சிவனாரின் சக்தி தெரியும் - அவரால்
கடும்காய்ச்சல் வெப்பநோய் காணாமல் போகும்
தொடுத்தளிப்போம் வெண் அல்லிப்பூ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. ஸ்ரீ சார்த்தூலஹர மூர்த்தி

முயலகனை வென்று முனிவரைக் காத்த
செயலால்சார்த் தூலஹர ரென்றார் - பயமாகும்
பில்லியும் சூனியம் பின்னோடிப் போகுமாம்
செல்வமெல்லாம் மீண்டுவரும் சேர்ந்து!

## 26. ஸ்ரீ பாசுபத மூர்த்தி

பாசுபத மூர்த்தியார் பார்த்திடும் முக்கண்ணோ
வீசிடும் வேல் அம்பு வீரவாள் - காசு
கடன்துயர் நீங்கும் கடும்பகை போகும்
அடைவாய் பிறவிப்பயன் ஆம்!

## 27. ஸ்ரீ கங்காள மூர்த்தி

வாமன் எலும்புதனை தண்டாகக் கொண்டதால்
நாமமாம் கங்காளன் நம்புக - நாமெல்லாம்
கேது வியாழன் கெடுதோஷம் நீங்கிட
ஏதவாய் இக்கோயில் செல்!

## 28. ஸ்ரீ கேசவார்த்த மூர்த்தி

கேசவார்த்த மூர்த்தி திருக்கோயில் சென்றாங்கு
பேசா சிவதியானம் செய்திட்டால் - ஈசனால்
குண்டலினிக் குள்ளே குளிர்ஈர்ப்பு உண்டாகும்
கண்டிடுவார் மோட்சம் கனிந்து!

## 29. ஸ்ரீ பிட்சாடன மூர்த்தி

முனிவர் தவத்தை முனிப்பெண்கள் கற்பை
புனிதமாக்க பிட்சாடர் மூர்த்தி - இனிய
பெருவாழ்வும் சித்தியும் பேரின்பம் காண
தருவார்நல் வாழ்க்கை தகுந்து!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. ஸ்ரீ சிம்ஹக்ன மூர்த்தி

சிம்ஹக்ன மூர்த்தி சிவனின் அவதாரம்
நம்மாள் குடும்பம் அமைதிக்கும் - சிம்மம்
உடல்வாக்கும் செய்யம் தொழிலில் உயர்வும்
உடனாகும் இன்பம் உறுதி!

## 31. ஸ்ரீ சண்டேச அனுக்கிரக மூர்த்தி

சண்டேச அனுக்கிரக மூர்த்தி என்பவராம்
தொண்டர்க்கு சண்டேசம்
கொண்டளித்தார் - பண்படுத்தும்
சண்டேசர் தாள்பணிதல் நல்லறிவு
எண்ணமாகும் வெண்சாதம் வில்வம் இயற்று!

## 32. ஸ்ரீ தட்சிணா மூர்த்தி

தட்சிணாமூர்த்தி தனிவழி பாடுதெய்வம்
இட்டு வணங்கிடு வெண்கமலம் - கிட்டும்
குழந்தையின் நற்பேறு கூடும் மணநாள்
அழகாய் நினைவாற்றல் ஆம்!

## 33. ஸ்ரீ யோக தட்சிணா மூர்த்தி

யோகநிலை தட்சணா மூர்த்தியைக் கும்பிட்டால்
போகப்பிறவியின்னல் போய்விடும் - ஆக
வியாழன் விரதமும் வெண்தயிர் பூசை
தியானமுமும் செய்தால் திடம்!

## 34. ஸ்ரீ வீணா தட்சிணா மூர்த்தி

பாட்டும் இசையும் பரதம் கலைகளும்
மீட்டிடும் தட்சணா வீணைமூர்த்தி - நாட்டிடும்
கல்வியில் முன்னேற்றம் காட்டும் உயர்பதவி
வெல்வதற்கு தட்சணா வீடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. ஸ்ரீ காலந்தக மூர்த்தி

காலந்த மூர்த்தியார் காலனை வென்றவர்
காலனை யஞ்சுவார் கால்பணிவர் - காலம்
அறுபதும் ஆனவர் ஆக்குவர்கல் யாணம்
பெறுவார்கள் நீண்ட ஆயுள் பேறு!

## 36. ஸ்ரீ காமதகன மூர்த்தி

காம தகனமூர்த்தி காணும் சிவபக்தர்
தாமெல்லாம் ஐக்கிய மாகிட - ஆமாம்
இவரை வணங்க சிறப்புப் பெறுவர்
தவமாய் குடும்பமும் தான்!

## 37. ஸ்ரீ இலகுளேஸ்வர மூர்த்தி

உயிர்களின் மும்மலம் உள்ளவை நீங்க
உயர்பதவி வந்திங் குயர - வயது வந்த
ஆண்பெண் கல்யாணம் ஆகிட, இலகுளேசர்
வேண்டிடச் செய்வார் விரைந்து!

## 38. ஸ்ரீ பைரவ மூர்த்தி

பைரவ மூர்த்திக்கு பாடு சகஸ்ரநாமம்
கைவரும் புத்திர பாக்கியம் - மெய்யாக
சர்க்கரை நோய் தீரும் சந்தைத் தொழில் ஓங்கும்
அர்ச்சனைக்கு வெண் ஆவின் பால்!

## 39. ஸ்ரீ ஆபத்துத்தாரண மூர்த்தி

ஆபத்தில் வந்திடுவார் ஆபத்துத் தாரணர்
தீபத்தை யேற்றும் இடர்போகும் - சாபந்தான்
நள்ளிரவு பன்னிரண்டடில் நாம்பூசை செய்திட்டால்
உள்ளிருந்து போய்விடுமாம் ஓடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. ஸ்ரீ வடுவ மூர்த்தி

முண்டா சுரன்தன் கொடுமைதனை போக்கிட
கொண்டார் வடுகன் உருவமது - கண்டிட
ஏழாம் சனி நீங்கும் எட்டும் திருமணம்
வீழும் வழக்குகள் வென்று!

## 41. ஸ்ரீ சேத்திரபால மூர்த்தி

சேத்திர பாலமூர்த்தி சேர்ந்து தரிசித்தால்
காத்திடுவார் நாளும் கவனித்து - சேர்ந்திட்ட
சொத்தையும் காக்பார் சுகத்தைக் கொடுத்திடுவார்
நித்தமும் தாள்பணிவோம் நின்று!

## 42. ஸ்ரீ வீரபத்திர மூர்த்தி

வீரபத்திர மூர்த்தியார் வீர மனம்கொடுப்பார்
தீராசெவ் வாய்தோஷம் தீர்ந்திடுவார் - ஊரெல்லாம்
நீர்மழை பெய்வார் நிறைந்திடும் செல்வங்கள்
ஏர்வளம் காணும் நிலம்!

## 43. ஸ்ரீ அகோர அத்திர மூர்த்தி

மாசி கிருஷ்ணபட்ச ஞாயிறு நாள்தனில்
பூசை நடுநிசியில் பூசித்தால் - ஆசியாக
நீண்டவழக்கும நெடிய பகையுமெல்லாம்
கூண்டொடு போகும் உதிர்ந்து!

## 44. ஸ்ரீ தட்சயக்ஞஷத மூர்த்தி

தட்சயஞ மூர்த்தியை தாள்பணிந்து கும்பிட்டால்
லட்சியம் வெற்றி வசமாகும் - கட்சி
வழக்குகள் வெற்றியாகும் வாழ்க்கை உயரும்
முழக்கமாகும் தம்பதியர் மூச்சு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. ஸ்ரீ கிராத மூர்த்தி (வேட மூர்த்தி)

கிராத மூர்த்தி கோயில் பெரும் சொத்து சண்டை
விரோதத்தைத் தீர்த்துவைக்கும் வென்று - அரளிப்பூ
அர்ச்சனை செய்து வெண் பொங்கல் அமுதமிட்டு
அர்ப்பணித்தால் நன்மைகள் ஆம்!

## 46. ஸ்ரீ குரு மூர்த்தி

மாணிக்க வாசகர்க்கு மாறுவேடம் பூண்டவராய்
காணிக்கை செய்தவர் ஐந்தெழுத்தை - காணின்
குருவாக ஓதி குருமூர்த்தி யானார்
திருவாச கம்அந்தத் தேன்!

## 47. ஸ்ரீ அசுவாரூட மூர்த்தி

நரியும் பரியான நாடகத்திற்கு
உரியவர் நம்இறைவன் உண்மை - தெரிக
அசுவா ரூடமூர்த்தி அர்த்தம் அதுவாம்
விசுவாசி பக்திமேலாம் மேல்!

## 48. ஸ்ரீ கஜாந்திக மூர்த்தி

ஐராவ தம்யானை ஆசைக்குக் காட்சிதந்து
மெய்யென நின்றார் சிவபெருமான் - தெய்வம்
பெயரே கஜாந்திக மூர்த்தி எனவாம்
செயல்நடை நீக்கும் நினை!

## 49. ஸ்ரீ சலந்தரவத மூர்த்தி

சலந்தரனைச் சண்டை செய்து தான்வென்ற தெய்வம்
சலத்திர மூர்த்திய ரானார் - நலம் பெற
தொல்லைகள் நீங்க கொடும்விஷம் நீங்கிட
நல்லன வாகிட நாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50. ஸ்ரீ ஏகபாதத்ரி மூர்த்தி

பிறப்பு இறப்பு பிறகொன்றும் இல்லா
சிறப்பு சிவபெருமான் செய்கை - குறிப்பே
ஏகபாத மூர்த்தியார்! ஏவலும் சூனியம்
போகும் மனநோயும் போ!

## 51. ஸ்ரீ திரிபாதத்ரி மூர்த்தி

பிரம்மன் சிவனார் திருமால்மும் மூர்த்தி
திரிபாத மூர்த்தியானார் இங்கே - தெரிக
மழைபொழிய நல்ல அறிவுயர ஆற்றும்
தொழிலோங்க செய்வார்கள் கூடி!

## 52. ஸ்ரீ ஏகபாத மூர்த்தி

ஏகபாத மூர்த்தியார் எங்கும் முதல்வர்
ஆகும் உலகும் அடிபணியும் - வேகமாய்
கல்யாணம் ஆகும் கடும் தடை போகுமாம்
நல்ல செயலாகும் காண்!

## 53. ஸ்ரீ கவுரிவரப்ரத மூர்த்தி

காளிவரம் பெற்றாள் கவுரிமூாத்தி யாலேதான்
தோளிருக்கும் தோல்வியாதி போகுமாம் - ஆளுக்கு
கண்நோயும் போய்விடும் கல்யாண மாகிவிடடம்
உண்டாகும் தாலாட்டும் பேறு!

## 54. ஸ்ரீ சக்கரதான மூர்த்தி

திருமால் தொழுத சிவபக்திக் காக
அருட்தானம் சக்கரம் தந்தார் - பெரும்வரமாய்
சக்கர தானமூர்த்தி யானார் உயர்பதவி
மிக்கஅறி வாயுள் மிகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 55. ஸ்ரீ கவுரிலீலா சமன்வித மூர்த்தி

கவுரிலீலா செல்வமும் கல்வியும் செய்வார்
மவுன விளையாட்டும் செய்வார் - கௌலர்க்கு
நீண்டநாள் ஆயுளும் தெய்வப் பொருள்தருவார்
வேண்டுவோம் நன்மைதனைக் கேட்டு!

## 56. ஸ்ரீ விசாபகரண மூர்த்தி

ஆலகால நஞ்சால் அனைவரையும் காத்ததால்
கோலவிசா மூர்த்தியாய் கொண்டழைத்தார் - நீல
விடப்பயம் தீருமாம்! வீட்டில் அமைதி
திட ஆயுள் உண்டு தெளிவு!

## 57. ஸ்ரீ கருடன் அருகிருந்த மூர்த்தி

சம்பந்தர் கும்பிட்ட நந்தி விலகியதாம்
நம்கிக் கருடன் அருகிருக்க - கும்பிட்டால்
செல்வம் செழிக்கும் நிறையும் மதி நுட்பம்
கல்வி பெருக்கும் கலந்து!

## 58. ஸ்ரீ பிரம்ம சிரச்சேத மூர்த்தி

பிரம்மகர்வம் நீங்க சிரச்சேதம் செய்ய
பிரம்ம சிரச்சேத மூர்த்தி - நிரம்ப
சூரியன் வந்து துதிப்பார்! மணமாகும்
சூரிய நோய் தீரும் போற்று!

## 59. ஸ்ரீ கூர்ம சம்கார மூர்த்தி

கூர்மத்தை முக்கண்ணர் கொன்றதால் ஈசனார்
கூர்மசம் ஹாரமூர்த்தி சொல்லானார் - நீர்க்கண்டம்
அச்சமெல்லாம் நீங்குமாம் அர்ச்சனை செய்திட்டால்
நிச்சயமாம் நல்ல நிகழ்வு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60. மச்ச சம்கார மூர்த்தி

அச்சமிட்ட மீனை அழித்தார் சிவபெருமான்
மச்சசம் ஹாரமூர்த்தி ஆனாராம் - மெச்ச
தொழில்விருத்தி யாகும் தொடங்கும் தொழில்கள்
வழிபிறக்கும் நல்வாழ்வு வந்து!

## 61. ஸ்ரீ வராக சம்கார மூர்த்தி

வராகத்தைக் கொன்றவர் ஆபரணம் கொண்டார்
வராகசம் ஹாரம் வகுத்தார் - வராது
பகைவர் திருஷ்டி பயனாம் வணிகம்
மிகையாய் வளம் பெறும் வீடு!

## 62. ஸ்ரீ பிரார்த்தனா மூர்த்தி

பிரார்த்தனா மூர்த்தியை பிரார்த்தனை செய்தால்
வராத திருமணம் வந்தாகும் - இராது இடையூறு!
செல்வம் சிறந்தோங்கிக் காணும்
நடைபெறும் யாவுமாம் நன்று!

## 63. ஸ்ரீ ரத்த பிட்சா பிரதான மூர்த்தி

திருமால் அகந்தைபோக பிட்சையாம் ரத்தம்
வரவாக ரத்தபிட்சா வானார் - அருளாய்
பகைவர்கள் தொல்லைகள் போகுமாம்!
பாவம் புகையாது நீங்குமாம் போய்!

## 64. ஸ்ரீ சிஷ்ய பாவ மூர்த்தி

முருகன் குருவாய் சிவனார் சிஷ்யராய்
இருப்பவர் சிஷ்யபாவ மூர்த்தி - அருள
இருக்கும் நெடிய ஆயுள்! நீளும் அறிவும்
பெருக்கும் கல்வியும் மங்களம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. சக்தி

## வச்சரப்பஞ்சரமென்னும்
# சக்திக் கவசம்

இந்த வச்சிரபஞ்சரத்தை யாவர் செபித்தாலும் அவர்களுடைய தேகத்திலுண்டாகிய வெப்பநோயொழியும். எட்டுத்தரஞ்சலத்தில் அபிமநதிரித்து அதனை உட்கொண்டால் வயிற்றிலே பொருந்திய குன்மஞ் சூலை முதலிய நோயனைத்தும் நீங்கும். இரவில் வழி நடக்கும் போது செபித்தாலும் பூதம், பேய் இவைகள் தொடரமாட்டாவாம். பிள்ளையைப் பெறமாட்டாமல் வருத்தப்படுகின்ற மாதருடைய அருகிலிருந்து செபித்தாலும் அல்லது நீரிலோதி உட்கொள்ளக்கொடுத்தாலும், விரைவில் வருத்தம் நீங்கிப் பிள்ளை பெறுவார்கள். யுத்தத்திலே செபித்தால் சத்துருக்கள் தோல்வியடைவார்கள். சிறுபிள்ளைகளுக்கு நீரிலோதி உட்கொள்ளக் கொடுத்தால் வியாதிகள் நீங்கும். இதை யாவரோதினாலும் அவர்களை உமாதேவி காப்பாற்றுவாள். அஃது காசிக் காண்டம் வச்சிரபஞ்சக முரைத்த அத்தியாயத்துள் இருப்பது.

(தேவர்கள் தங்களுக்கு நெடுநாள் இடரிழைத்திருநந்த துற்கனென்னும் அவுணனை உமாதேவியானவள் சங்கரித்து அவ்விடரை நீக்கியதுகண்டு அத்தேவியை வணக்கஞ் செய்துதுதி செய்து இக்கவசமென்றறிந்து ஓதுவோம், சக்தியின் திருவருள் பெறுவோம்.)

அங்கையிற் கரகந் தாங்கும் பிரமானியருளுனோடுந்
துக்கமென் சென்னி காக்க வயிணவி துகளிலாகம்
எங்கனுங் காக்கச் செய்ய வேந்தெழி லுருத்திராணி
தங்கு மெண்டி சையுமன்பு தழைத்திட இனிது காக்க 1

கொன்னுனைச் சூலி சென்னி மயிரினைக் குறித்துக் காக்க
மன்னு வெண்பிறை தாழ் சென்னி வயங்கொளி நெற்றிகாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மையிற் புருவ நாளும் பரிவொடு உமையாள் காக்க
என்னையாண் முக்கணீச இறைவி கண்ணினைகள் காக்க 2

வயமிகு இமயவல்லி மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு விசையை மேல்கி ழிதனைச் சிறந்து காக்க
வயலிடைச் சுறுதி தூய வஞ்செவி காக்க கண்ணென்
பயின் மலருறையுங் செல்வி பல்லினை உவந்து காக்க 3

சண்டி மென்கபோலங் காக்க தவளநாண் மலரின் வைகும்
ஒன்டொடி நன்னாக் காக்க விசயை மங்கலைமற்றறொவ்வாக்
கண்கவர் நாடி காக்க காத்தியாயனி யெஞ்ஞான்று
முண்டக மலரிற்றூய முகத்தினைச் சிறந்து 4

காள முண்டிருடை நீலகண்டி மென்கழுத்துக் காக்க
கோளில் பூதாரசத்தி சுவற் புறங்காக்க கூர்மி
நீளொளிச்சநந்தி காக்க வயிந்திரி நெரியினோடுந்
தோளினைக் காக்க பத்மை துணை மலரங்கை காக்க 5

கமலை கைவிரல்கள் காக்க வரசை கையுகிர்கள் காக்க
திமிர முண்டொளிரும் வெய்யோன் மண்டலத் துறையுஞ் செல்வி
எம திருவாகு மூலங் காக்க வானவர்களேத்த
அமிர் தலகரி நாணா மகன் மணிமார்பகங் காக்க 6

தரித்திரி யிதங்காக்க தயித்தியர்ச் செகுபோண் மிக்க
கருத்தொடு முலைகள் காக்க சகத்தினிலிறைமை பூண்டோடு
இருத்தகு வயிறு காக்க திகழ்த போகதி தன்னுள்ளந்
தருத்திய னுந்தி காக்க வசைவளர் முதுகு காக்க 7

கருதருவி கடை கடிதலம்பாமை வாய்ந்த
குருமணிச் சகனாங் காக்க குகராணி குய்யங் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருடர வருமபாய கந்தினிய பானங் காக்க
தெருளுடைவிபுலை யென்றுஞ் சிறப்புடைக்குறங் காக்க 8

லளிதை மென்முழந்தாள் காக்க வியற்சபை கணைக்கால் காக்க
களிதரு கோரை வாய்ந்த பரட்டினைக் காக்கமிக்க
அளிகொள் பாலதலத்திற் செல்வோ ளணிகெழு புறந்தாள் காக்க
ஒளிர் நகம் விரள்சந்திரி யுக்கிரியுவந்து காக்க 9

தலத்துறை மடந்தையுள்ளங் காலினைகாக்க தண்ணென்
மலர்திரு மனையைக் காக்க வயங்கு கேத்திரதை யோங்கி
உலப்பில் கேத்திரங்கள் காக்க பிரியகரை யொழிவறாது
நல்தரு மக்கடம்மை நன்குறக் காக்கவன்றே 10

உயர்சனா தனியெஞ்ஞான்று மொழிவறும் ஆயுள் காக்க
அயர்வறு சீர்த்தியாவு மாதேவி காக்கமிக்க
செயிரறு தருமம்யாவுந் தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக்குலத்தை வாய்ந்தகுலதேவி யினிதுக்காக 11

சற்கதி பிரதமை நல்லோ ரியைபினைந் தயாவிற்காக்க
விற்கொடும் போரினீரில் வெளியினில் வனத்திற் சூதில்
இயற்புற மதனி லோங்கு சர்வாணி காக்க வெண்ணாப்
பொற்றரு மலர் சடுவிப் புங்கவ ரேத்தினாரே 12

(சக்திக் கவசம் முற்றிற்று)

தாயே மிகவும் தயவுடையார் எனச் சாற்றுவர் இச்
சேயேன் படுந்துயர் நீக்கஎன் னேஉளம் செய்திலையே
நாயேன் பிழைஇனி நாடாது நல்லருள் நல்கவரு
வாயே எம், ஒற்றி மயிலே! வடிவுடை மாணிக்கமே.

- இராமலிங்க சுவாமிகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அம்மன் அர்ச்சனை - 108

ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
ஓம் அருமறையின் வரம்பே போற்றி
ஓம் அறம் வளர்க்கும் அம்மையே போற்றி
ஓம் அரசிளங் குமரியே போற்றி
ஓம் அப்பர் பிணிமருந்தே போற்றி
ஓம் அமுத நாயகியே போற்றி
ஓம் அருந்தவ நாயகியே போற்றி
ஓம் அருள்நிறை அம்மையே போற்றி
ஓம் ஆலவாய்க் கரசியே போற்றி 10

ஓம் ஆறுமுகத்தின் அன்னையே போற்றி
ஓம் ஆதியின் பாதியே போற்றி
ஓம் ஆலால சுந்தரியே போற்றி
ஓம் ஆநந்த வல்லியே போற்றி
ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி
ஓம் இமயத்தரசியே போற்றி
ஓம் இடபத்தோன் துணையே போற்றி
ஓம் ஈசுவரியே போற்றி
ஓம் உயிர் ஓவியமே போற்றி
ஓம் உலகம்மையே போற்றி 20

ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
ஓம் எண்திசையும் வென்றோய் போற்றி
ஓம் ஏகன் துணையே போற்றி
ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
ஓம் ஐயந் தீர்ப்பாய் போற்றி
ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கற்றோர்க்கும் எளியோய் போற்றி
ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
ஓம் கடம்பவன் சுந்தரியே போற்றி 30

ஓம் கலியாண சுந்தரியே போற்றி
ஓம் கனகமணிக் குன்றே போற்றி
ஓம் கற்பின் அரசியே போற்றி
ஓம் கருணையூற்றே போற்றி
ஓம் கல்விக்கு வித்தே போற்றி
ஓம் கனகாம்பிகையே போற்றி
ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
ஓம் காட்சிக் கினியோய் போற்றி
ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி 40

ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
ஓம் குலச்சிறை கரத்தோய் போற்றி
ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
ஓம் கூடற் கலாப மயிலே போற்றி
ஓம் கோலப் பசுங் கிளியே போற்றி
ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
ஓம் சக்தி வடிவே போற்றி
ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
ஓம் சித்தந் தெளிவிப்பாய் போற்றி 50

ஓம் சிவயோக நாயகியே போற்றி
ஓம் சிவானந்த வல்லியே போற்றி
ஓம் சிங்கார வல்லியே போற்றி
ஓம் செந்தமிழ்த் தாயே போற்றி
ஓம் செல்வத்துக்கரசியே போற்றி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் சோனைத் தலைவியே போற்றி
ஓம் சொக்கர் நாயகியே போற்றி
ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய்போற்றி
ஓம் ஞானாம்பிகையே போற்றி
ஓம் ஞானப் பூங்கோதையே போற்றி 60

ஓம் தமிழர்குலச் சுடரே போற்றி
ஓம் தண்டமிழ்த் தாயே போற்றி
ஓம் திருவுடையம்மையே போற்றி
ஓம் திசையெலாம் புரந்தாய் போற்றி
ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
ஓம் திருநிலை நாயகியே போற்றி
ஓம் தீந்தமிழ்ச் சுவையே போற்றி
ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
ஓம் தென்னவன் செல்வியே போற்றி
ஓம் தென்மொழி யம்மையே போற்றி 70

ஓம் தையல் நாயகியே போற்றி
ஓம் நாற்கனியின் சுவையே போற்றி
ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
ஓம் நல்ல நாயகியே போற்றி
ஓம் நீலாம் பிகையே போற்றி
ஓம் நீதிக்கரசியே போற்றி
ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
ஓம் பழமறையின் குருத்தே போற்றி
ஓம் பரமானந்தப் பொருளே போற்றி
ஓம் பண்ணமைத்த சொல்லே போற்றி 80

ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
ஓம் பல்லுரியின் தாயே போற்றி
ஓம் பசுபதி நாயகியே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
ஓம் பாண்டியரின் தேவியே போற்றி
ஓம் பார்வதி அம்மையே போற்றி
ஓம் பிறவிப்பிணியே தீர்ப்பாய் போற்றி
ஓம் பெரிய நாயகியே போற்றி
ஓம் பொன்மயி லம்மையே போற்றி
ஓம் பொற்கொடி அன்னையே போற்றி 90

ஓம் மலையத்துவசன் மகளே போற்றி
ஓம் மங்கல நாயகியே போற்றி
ஓம் மழலைக் கிளியே போற்றி
ஓம் மனோன்மணித் தாயே போற்றி
ஓம் மண்சுமந்தோன் மாணிக்கமே போற்றி
ஓம் மாயோன் தங்கையே போற்றி
ஓம் மாணிக்க வல்லியே போற்றி
ஓம் மீனவக்கோன் மகளே போற்றி
ஓம் மீனாட்சி யம்மையே போற்றி
ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி 100

ஓம் முக்கண் சுடர் விருந்தே போற்றி
ஓம் யாழ்மொழி யம்மையே போற்றி
ஓம் வடிவழ கம்மையே போற்றி
ஓம் வேலனுக்கு வேல்ஈந்தோய் போற்றி
ஓம் வேத நாயகியே போற்றி
ஓம் வையகம் வாழ்விப்போய் போற்றி
ஓம் அம்மையே அம்பிகையே போற்றி
ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி போற்றி 108


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. முருகன்

## ஸ்ரீ சுப்பிரமணியர் அர்ச்சனை - 108

ஓம் ஆறுமுகனே போற்றி
ஓம் ஆண்டியே போற்றி
ஓம் அரன் மகனே போற்றி
ஓம் அபிஷேகப்பிரியனே போற்றி
ஓம் அழகா போற்றி
ஓம் அப்பா போற்றி
ஓம் ஆதிமூலமே போற்றி
ஓம் ஆவினன் குடியே போற்றி
ஓம் இறைவனே போற்றி
ஓம் இளையனே போற்றி 10

ஓம் இடும்பனை வென்றவனே போற்றி
ஓம் ஈசன் மைந்தனே போற்றி
ஓம் ஈராறு கண்ணனே போற்றி
ஓம் உமையள் மகனே போற்றி
ஓம் உலக நாயகனே போற்றி
ஓம் ஐயனே போற்றி
ஓம் ஐங்கரன் தம்பியே போற்றி
ஓம் ஒன்றே போற்றி
ஓம் ஓங்காரனே போற்றி 20

ஓம் ஓதுவார்க்கினியனே போற்றி
ஓம் ஔவைக்கருளியவனே போற்றி
ஓம் கருணாகரனே போற்றி
ஓம் கதிர் வேலனே போற்றி
ஓம் கந்தனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கடம்பனே போற்றி

ஓம் கவசப்பிரியனே போற்றி

ஓம் கார்த்திகை மைந்தனே போற்றி

ஓம் கிரிராஜனே போற்றி

ஓம் கிருபாநிதியே போற்றி 30

ஓம் குகனே போற்றி

ஓம் குமரனே போற்றி

ஓம் குன்றம் அமர்ந்தவனே போற்றி

ஓம் குறத்தி நாதனே போற்றி

ஓம் குரவனே போற்றி

ஓம் குருபரனே போற்றி

ஓம் சங்கரன் புதல்வனே போற்றி

ஓம் சஷ்டி நாயகனே போற்றி

ஓம் சரவணபவனே போற்றி

ஓம் சரணாகதியெ போற்றி 40

ஓம் சத்ரு சங்காரனே போற்றி

ஓம் சர்வேஸ்வரனே போற்றி

ஓம் சிக்கல் பதியே போற்றி

ஓம் சிங்காரனே போற்றி

ஓம் சுப்பிரமணியனே போற்றி

ஓம் சுர பூபதியே போற்றி

ஓம் சுந்தரனே போற்றி

ஓம் சுகுமாரனே போற்றி

ஓம் சுவாமி நாதனே போற்றி

ஓம் சுருதிப்பொருளுரைத்தவனே போற்றி 50

ஓம் சூழ் ஒளியே போற்றி

ஓம் சூரசம்ஹாரனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் செல்வனே போற்றி
ஓம் செந்தூரக் காவலனே போற்றி
ஓம் சேகரனே போற்றி
ஓம் சேவகனே போற்றி
ஓம் சேனாபதியே போற்றி
ஓம் சேவற்கொடியோனே போற்றி
ஓம் சொற்பதங் கடந்தவனே போற்றி
ஓம் சோலையப்பனே போற்றி 60

ஓம் ஞானியே போற்றி
ஓம் ஞாயிறே போற்றி
ஓம் ஞாலம் காப்பவனே போற்றி
ஓம் ஞானோபதேசியே போற்றி
ஓம் தணிகாசலனே போற்றி
ஓம் தயாபரனே போற்றி
ஓம் தண்டாயுதபாணியே போற்றி
ஓம் தகப்பன் சாமியே போற்றி
ஓம் திருவே போற்றி
ஓம் திங்களே போற்றி 70

ஓம் திருவருளே போற்றி
ஓம் தினைப்புனம் புகுந்தோய் போற்றி
ஓம் துணைவா போற்றி
ஓம் துரந்தரா போற்றி
ஓம் தென்பரங்குன்றனே போற்றி
ஓம் தெவிட்டா இன்பமே போற்றி
ஓம் தேவாதி தேவனே போற்றி
ஓம் தேவனே போற்றி
ஓம் தேயனே போற்றி 80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நாதனே போற்றி
ஓம் நிமலனே போற்றி
ஓம் நீறணிந்தனே போற்றி
ஓம் பிரணவமே போற்றி
ஓம் பரப்பிரம்மமே போற்றி
ஓம் பழனியாண்டவனே போற்றி
ஓம் பாலகுமாரனே போற்றி
ஓம் பன்னிரு கையனே போற்றி
ஓம் பகை ஒளிப்பவனே போற்றி
ஓம் போகர் நாதனே போற்றி 90

ஓம் போற்றப்படுவோனே போற்றி
ஓம் மறைநாயகனே போற்றி
ஓம் மயில் வாகனனே போற்றி
ஓம் மகாசேனனே போற்றி
ஓம் மருதமலையானே போற்றி
ஓம் மால் மருகனே போற்றி
ஓம் மாவித்தையே போற்றி
ஓம் முருகனே போற்றி
ஓம் மூவாப் பொருளே போற்றி
ஓம் யோக சித்தியே போற்றி 100

ஓம் வயலூரானே போற்றி
ஓம் வள்ளி நாயகனே போற்றி
ஓம் விறலிமலையானே போற்றி
ஓம் விநாயகர் சோதரனே போற்றி
ஓம் வேலனே போற்றி
ஓம் வேத முதல்வனே போற்றி
ஓம் கலியுக வரதனே போற்றி
ஓம் புண்ணிய மூர்த்தியே போற்றி 108


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. கிருஷ்ணர்

## ஸ்ரீ திருமால் அர்ச்சனை - 108

ஓம் அப்பா போற்றி
ஓம் அறமே போற்றி
ஓம் அருளே போற்றி
ஓம் அச்சுதா போற்றி
ஓம் அரவ சயனா போற்றி
ஓம் அரங்கமா நகராய் போற்றி
ஓம் அற்புத லீலா போற்றி
ஓம் ஆறுமுகனின் அம்மான் போற்றி
ஓம் அனுமந்தன் தேவா போற்றி
ஓம் ஆதியே அனாதி போற்றி 10

ஓம் ஆழ்வார்கள் தொழுவாய் போற்றி
ஓம் ஆதி மூலனே போற்றி
ஓம் ஆபத்துச் சாயகா போற்றி
ஓம் ஆனைக்கும் அருளாய் போற்றி
ஓம் ஆனந்த மூர்த்தியே போற்றி
ஓம் உமையம்மை அண்ணா போற்றி
ஓம் உலகெலாம் காப்பாய் போற்றி
ஓம் உத்தமர் தொழுவாய் போற்றி
ஓம் உம்பருக் கருள்வாய் போற்றி
ஓம் எங்கமே நிறைந்தாய் போற்றி 20

ஓம் எண்குண சீலா போற்றி
ஓம் ஏழைப்பங் காளா போற்றி
ஓம் எழில்நிற வண்ணா போற்றி
ஓம் எழில்மிகு தேவே போற்றி
ஓம் கலியுக வரதா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கண்கண்ட தேவே போற்றி
ஓம் கருவவா கனனே போற்றி
ஓம் கல்யாணமூர்த்தி போற்றி
ஓம் காமரு தேவே போற்றி
ஓம் காலனைத் தவிர்ப்பாய் போற்றி 30

ஓம் கோக்களைக் காத்தாய் போற்றி
ஓம் கோவிந்தா - முகுந்தா போற்றி
ஓம் சர்வலோ கேசா போற்றி
ஓம் சாந்த குணசீலா போற்றி
ஓம் சீனிவாசா போற்றி
ஓம் சிங்காரமூர்த்தி போற்றி
ஓம் சிக்கலை யறுப்பாய் போற்றி
ஓம் சிவபபிரான் மகிழ்வாய் போற்றி
ஓம் தவசிகள் தொழுவாய் போற்றி
ஓம் தரணியைக் காப்பாய் போற்றி 40

ஓம் திருமகள் மணாளா போற்றி
ஓம் திருமேனி உடையாய் போற்றி
ஓம் திருவேங்கடவா போற்றி
ஓம் திருமலைக் கொழுந்தே போற்றி
ஓம் திருத்துழாய் அணிவாய் போற்றி
ஓம் தீந்தமிழ் அருள்வாய் போற்றி
ஓம் கடலமு தளித்தாய் போற்றி
ஓம் நந்தகோ பாலா போற்றி
ஓம் நான்முகன் பிதாவே போற்றி
ஓம் நாரதர் துதிப்பாய் போற்றி 50

ஓம் நவமணி தரிப்பாய் போற்றி
ஓம் நரசிம்ம தேவே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நான்மறை தொழுவாய் போற்றி
ஓம் பாற்கடல் கிடந்தாய் போற்றி
ஓம் பாவலர் பணிவாய் போற்றி
ஓம் தசாவ தாரா போற்றி
ஓம் தயாநிதி - ராமா போற்றி
ஓம் தந்தைசொல் காத்தாய் போற்றி
ஓம் தவக்கோலம் பூண்டாய் போற்றி
ஓம் பட்டத்தைத் துறந்தாய் போற்றி 60

ஓம் பரதனுக் கீந்தாய் போற்றி
ஓம் பாண்டவர் துணைவா போற்றி
ஓம் பரந்தாம - கண்ணா போற்றி
ஓம் பாஞ்சாலி மானம் காத்த பார்புகழ் தேவேபோற்றி
ஓம் புண்ணிய மூர்த்தி போற்றி
ஓம் புலவர்கள் புகழ்வாய் போற்றி
ஓம் வாமன வரதா போற்றி
ஓம் உலகினை அளந்தாய் போற்றி
ஓம் பிரகலாதன் பணிவாய் போற்றி
ஓம் பரகதி அருள்வாய் போற்றி 70

ஓம் துருவனும் தொழுவாய் போற்றி
ஓம் சபரியின் கனியே போற்றி
ஓம் துருவநிலை தந்தாய் போற்றி
ஓம் நற்கதி தந்தாய் போற்றி
ஓம் வையகம் புகழ்வாய் போற்றி
ஓம் வைகுண்ட வாசா போற்றி
ஓம் முழுமதி வதனா போற்றி
ஓம் மும்மலம் அறுப்பாய் போற்றி
ஓம் கமலக் கண்ணா போற்றி
ஓம் கலைஞான மருள்வாய் போற்றி 80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கஸ்தூரி திலகா போற்றி
ஓம் கருத்தினி லமர்வாய் போற்றி
ஓம் பவளம்போல் வாயா போற்றி
ஓம் பவப்பணி ஒழிப்பாய் போற்றி
ஓம் நான்கு புயத்தாய் போற்றி
ஓம் நற்கதி அருள்வாய் போற்றி
ஓம் சங்குசக் கரனே போற்றி
ஓம் சன்மார்க்க மருள்வாய் போற்றி
ஓம் கோபிகள் லோலா போற்றி
ஓம் போபமும் தணிப்பாய் போற்றி 90

ஓம் வேணுகோ பாலா போற்றி
ஓம் வேட்கையைத் தணிப்பாய் போற்றி
ஓம் புருடோத் தமனே போற்றி
ஓம் பொன்புகழ் அருள்வாய் போற்றி
ஓம் மாயா வினோதா போற்றி
ஓம் மணநிலை தருவாய் போற்றி
ஓம் விஜயரா கவனே போற்றி
ஓம் வினையெலாம் ஒழிப்பாய் போற்றி
ஓம் பதும நாபனே போற்றி
ஓம் பதமலர் தருவாய் போற்றி 100

ஓம் பார்தத்தசா ரதியே போற்றி
ஓம் பார்வேந்தர் தொழுவாய் போற்றி
ஓம் கரிவரத ராஜா போற்றி
ஓம் கனிவுடன் காப்பாய் போற்றி
ஓம் சுந்தர ராஜா போற்றி
ஓம் சுகமெலாம் தருவாய் போற்றி
ஓம் அனைத்துமே ஆனாய் போற்றி
ஓம் அரிஅரி நமோ நாராயணா போற்றி 108


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08. அறுபத்து மூன்று நாயன்மார் நாமம்

உ

சிவமயம்

## தினமும் சைவசமயக் குருமார்களை வணங்குவோம்.

உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஓம் சுந்தரமூர்த்தி நாயனார் போற்றி போற்றி
ஓம் திருநீலகண்ட நாயனார் போற்றி போற்றி
ஓம் இயற்பகை நாயனார் போற்றி போற்றி
ஓம் இளையான்குடிமாற நாயனார் போற்றி போற்றி
ஓம் மெய்ப்பொருள் நாயனார் போற்றி போற்றி
ஓம் விரண்மிண்ட நாயனார் போற்றி போற்றி
ஓம் அமர்நீதி நாயனார் போற்றி போற்றி
ஓம் எறிபத்த நாயனார் போற்றி போற்றி
ஓம் ஏனாதிநாத நாயனார் போற்றி போற்றி
ஓம் கண்ணப்ப நாயனார் போற்றி போற்றி
ஓம் குங்குலியக்கலைய நாயனார் போற்றி போற்றி
ஓம் மனாக்கஞ்சாற நாயனார் போற்றி போற்றி
ஓம் அறிவாட்டாய நாயனார் போற்றி போற்றி
ஓம் ஆனாய நாயனார் போற்றி போற்றி
ஓம் மூர்த்தி நாயனார் போற்றி போற்றி
ஓம் முருக நாயனார் போற்றி போற்றி
ஓம் உருத்திரபசுபதி நாயனார் போற்றி போற்றி
ஓம் திருநாளைப் போவார் நாயனார் போற்றி போற்றி
ஓம் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் போற்றி போற்றி
ஓம் சண்டேசுர நாயனார் போற்றி போற்றி
ஓம் திருநாவுக்கரசு சுவாமிகள் போற்றி போற்றி
ஓம் குலச்சிறை நாயனார் போற்றி போற்றி
ஓம் பெருமிழலைக் குறும்ப நாயனார் போற்றி போற்றி
ஓம் காரைக்கால் அம்மையார் போற்றி போற்றி
ஓம் அப்பூதி அடிகள் போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் திருநீலநக்க நாயனார் போற்றி போற்றி
ஓம் நமிநந்தியடிகள் போற்றி போற்றி
ஓம் திருஞானசம்மந்த மூர்த்தி நாயனார் போற்றி போற்றி
ஓம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் போற்றி போற்றி
ஓம் திருமூல நாயனார் போற்றி போற்றி
ஓம் தண்டியடிகள் நாயனார் போற்றி போற்றி
ஓம் மூர்க்க நாயனார் போற்றி போற்றி
ஓம் சோமாசிமார நாயனார் போற்றி போற்றி
ஓம் சாக்கிய நாயனார் போற்றி போற்றி
ஓம் சிறப்புலி நாயனார் போற்றி போற்றி
ஓம் சிறுத்தொண்ட நாயனார் போற்றி போற்றி
ஓம் கழற்றிற்றறிவார் நாயனார் போற்றி போற்றி
ஓம் கணநாத நாயனார் போற்றி போற்றி
ஓம் கூற்றுவ நாயனார் போற்றி போற்றி
ஓம் புகழ்ச்சோழ நாயனார் போற்றி போற்றி
ஓம் நரசிங்க முனையரைய நாயனார் போற்றி போற்றி
ஓம் அதிபத்த நாயனார் போற்றி போற்றி
ஓம் கலிக்கம்ப நாயனார் போற்றி போற்றி
ஓம் கலிய நாயனார் போற்றி போற்றி
ஓம் சத்தி நாயனார் போற்றி போற்றி
ஓம் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் போற்றி போற்றி
ஓம் கணம்புல்ல நாயனார் போற்றி போற்றி
ஓம் காரி நாயனார் போற்றி போற்றி
ஓம் நின்றசீர் நெடுமாற நாயனார் போற்றி போற்றி
ஓம் வாயிலார் நாயனார் போற்றி போற்றி
ஓம் முனையடுவார் நாயனார் போற்றி போற்றி
ஓம் கழற்சிங்க நாயனார் போற்றி போற்றி
ஓம் இடங்கழி நாயனார் போற்றி போற்றி
ஓம் செருந்துணை நாயனார் போற்றி போற்றி
ஓம் புகழ்துணை நாயனார் போற்றி போற்றி
ஓம் கோட்புலி நாயனார் போற்றி போற்றி
ஓம் பூசலார் நாயனார் போற்றி போற்றி
ஓம் மங்கையர்க்கரசியார் நாயனார் போற்றி போற்றி
ஓம் நேச நாயனார் போற்றி போற்றி
ஓம் கோச்செங்கட் சோழ நாயனார் போற்றி போற்றி
ஓம் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் போற்றி போற்றி
ஓம் சடய நாயனார் போற்றி போற்றி
ஓம் இசைஞானியர் நாயனார் போற்றி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. வைரவர்

**திருச்சிற்றம்பலம்**

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
னொருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சிலப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர் படிவமேற் செறிந்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல்க ளேத்துவோம்.
எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர்வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமையவன்றே
தெளியு மாவலியைச் செற்றேற் செகுத்துரிக் கவயம் போர்த்த
வளியுளர் கச்சிகாவல் வயிரவர்க் கன்புசெய்வோம். 1

சென்றன னெதிரா நின்றே ராவணச் செருக்கி னிற்கு
மன்றளந் துளவினாற்கு மாமயக் கொழிய நேரா
வின்றியல் பிறவுஞ் சொன்னா னஃதவன் சிறிதுமெண்ணான்
கன்றிய வெகுளி மிக்கான் வயிரவக் கடவுட் செல்வன். 2

பற்றினன் வயிரத் தண்டம் பகிரண்டமதிர வோச்சிச்
சுற்றின னுருமுக்காலத் தெழித்தனன் றுளவமார்பி
னெற்றின னெற்றலோடு மெறிபடு சண்டவாயு
முற்றுற விற்று வீழ மூரிவெங் கிரியிற் சாய்ந்தான். 3

கருநிறக் கமஞ்சூன் கேக் காரதளுரித்து வாங்கித்
திருநிறத் தமைபக் காள கஞ்சுக மென்னச் சேர்த்தி
வெரிநுறப் பிடுங்கு மென்பு தண்டென விடுத்துக் கொண்டாள்
மருமலர்த்துளவ மாயோனாவை மயக்கந் தீர்த்தான். 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிமை துயர்த்த வண்ண லிரும்பவந் தொலைப்ப வேணைப்
பகவர் தமகந்தை மாற்றப் பண்ணவர் மதர்ப்புஞ் சிந்த
மிகுபெருங் கருணை தன்னால் வேதநாயகனுள்ளத்து
மகிழ்வொடு புரிந்தா னென்ப பயிரவக் கடவுடன்னை. 5

நீலுறு சுடரின் மெய்யு ஞெகிழிக ளாற்றுந் தாளு
மாலம துயிர்க்குஞ் செங்கேமுரவ வெற்றரையுஞ் சென்னி
மாலைகளநந்த கோடி வயின் பெயரு மார்புஞ்
சூலமும் பாசு நாணுந் துடியு மேந்திப் பொற்றேளும். 6

முக்கணுந் திங்களே போன் முளைத்த வாளெயிறும வன்னிச்
செக்கரஞ் சடையின் சீருஞ் செயிர் கெழுநகையு மாக
வுக்கிர வடிவு கொண்டாங் குதித்திடு வடுகன் றன்னை
மைக் கிளர் கண்டத் தெந்தை நோக்கி யேவகுத்துச் சொல்வான். 7

திகழ்ந்த நஞ்சிறுவனாகுஞ் செங்கமலத் தோன் சென்னி
யஜகழந்தது நம்மை யுச்சியிருந்ததே யதனை வல்லே
யகழ்ந்தனை கரத்திலேந்தி யவனுயிர் நல்கித் தம்மைப்
புகழ்ந்திடு முனிவர் தேவர் புரந்தொறும் போதியன்றே. 8

போந்தனை யனையர் தங்கள புலவுடற் சோரி தானே
வாய்ந்த தோ ரையமாக வாங்குதி வாங்கும் வேலை
வீந்தவர் தமக்கு மீட்டும் வியனுயி ருதவி யன்னே
ராய்ந்திடு மகந்தை மாற்றி யண்டமேலடைதியம்மா. 9

பொறியுறு முயிர்களும் புவனம் யாவையு
மிறுதியா யழிவுறுமீமத் தெல்லையின்
மறையெனு ஞாளியை யுயர்த்து மற்றவ
னுறுவதோர் மகிழ்ச்சியாலுலவு மென்பே. 10

சூடுவன் நெஞ்சிடை வைப்பள் பிரான் என்று
பாடுவன் பன் மலர் தூவிப் பணிந்து நின்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

றாடுவன் ஆடி அமரர் பிரான் என்று
நாடுவன் நாளின் றறிவது தானே. 11

போற்றி என் பார்அம ரர்புனி தன் அடி
போற்றி என் பார் அசுரர் புனி தன் அடி
போற்றி என் பார் மனிதர் புனிதன் அடி
போற்றி என் அன்புன் பொ லியவைத் தேனே. 12
நின்ற வயிரவி நீலி நிசாசரி
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்
சென்றருள் நாயகி தேவர் பிரானுக்கே
நன்றருள் ஞாலத்து நாடிடுஞ் சாற்றியே. 13

நடந்து வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த வுயிரது வுண்ணும் பொழுது
படர்ந்த வுடல்கொடு பந்தாடலாமே. 14

ஆமேவப் பூண்டருளாதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக் கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தோடு வாளதுகையே. 15

கையவை யாறுஞ் கருத்துற நோக்கிடு
மெய்யது செம்மை விளங்கு வயிரவர்
துய்யருள்ளத்தில் துளங்கு மெய்யயுற்றதாய்ப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே. 16

உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காக
உடல் சுழன்றால் வேட உடனே சுழலும்
உடலுயிர் உண்மையென றேர்ந்துகொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டையொத்தாரே. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ பைரவர் அர்ச்சனை - 108

ஓம் பைரவனே போற்றி
ஓம் பயநாசகனே போற்றி
ஓம் அஷ்டரூபனே போற்றி
ஓம் அஷ்டமித் தோன்றலே போற்றி
ஓம் அயன் குருவே போற்றி
ஓம் அறக்காவலனே போற்றி
ஓம் அகந்தையளிப்பவனே போற்றி
ஓம் அடங்காரின் அழிவே போற்றி
ஓம் அற்புதனே போற்றி
ஓம் அசிதாங்கபைரவனே போற்றி 10

ஓம் ஆனந்த பைரவனே போற்றி
ஓம் ஆலயக்காவலனே போற்றி
ஓம் இன்னல் பொடிப்பவனே போற்றி
ஓம் இடுகாட்டுமிருப்பவனே போற்றி
ஓம் உக்ரபைரவனே போற்றி
ஓம் உதிரங்குடித்தவனே போற்றி
ஓம் உன்மத்த பைரவனே போற்றி
ஓம் உறங்கையில் காப்பவனே போற்றி
ஓம் ஊழழித்தருவோனே போற்றி 20

ஓம் எல்லைத்தேவனே போற்றி
ஓம் எளிதில் இரங்குபவனே போற்றி
ஓம் கபாலதாரியே போற்றி
ஓம் கங்காளமூர்த்தியே போற்றி
ஓம் கர்வபங்கனே போற்றி
ஓம் கல்பாந்தபைரவனே போற்றி
ஓம் கதாயுதனே போற்றி
ஓம் கனல்வீசுங்கண்ணனே போற்றி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் கருமேகநிறனே போற்றி
ஓம் கட்வாங்கதாரியே போற்றி 30

ஓம் களவைக்குலைப்போனே போற்றி
ஓம் கருணாமூர்த்தியே போற்றி
ஓம் காலபைரவனே போற்றி
ஓம் கபாலிகர்தேவனே போற்றி
ஓம் கார்த்திகையில் பிறந்தவனே போற்றி
ஓம் காளாஷ்டமிநாதனே போற்றி
ஓம் காசிநாதனே போற்றி
ஓம் காவல் தெய்வமே போற்றி
ஓம் கிரோத பைரவனே போற்றி
ஓம் கொன்றைப்பிரியனே போற்றி 40

ஓம் சண்டைபைரவனே போற்றி
ஓம் சட்டை நாதனே போற்றி
ஓம் சம்ஹார பைரவனே போற்றி
ஓம் சம்ஹாரகால பைரவனே போற்றி
ஓம் சிவத்தோன்றலே போற்றி
ஓம் சிவாலயதிருப்போனே போற்றி
ஓம் சிட்சகனே போற்றி
ஓம் சீர்காழித்தேவனே போற்றி
ஓம் சுடர்சடையனே போற்றி
ஓம் சுதந்திர பைரவனே போற்றி 50

ஓம் சிவ அம்சனே போற்றி
ஓம் சுவேச்சா பைரவனே போற்றி
ஓம் சூலதாரியே போற்றி
ஓம் சூழ்வினையறுப்பவனே போற்றி
ஓம் செம்மேனியன் புத்திரனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் க்ஷேத்ரபாலனே போற்றி
ஓம் தனிச்சன்னதியுள்ளானே போற்றி
ஓம் தலங்களின் காவலனே போற்றி
ஓம் தீதழிப்பவனே போற்றி
ஓம் துஸ்வப்னநாசகனே போற்றி 60

ஓம் தெற்கு நோக்கனே போற்றி
ஓம் தைரியமளிப்பவனே போற்றி
ஓம் நவரஸரூபனே போற்றி
ஓம் நரசிம்மசாந்தனே போற்றி
ஓம் நள்ளிரவு நாயகனே போற்றி
ஓம் நரகம் நீக்குபவனே போற்றி
ஓம் நாய் வாகனனே போற்றி
ஓம் நாடியருள்வோனே போற்றி
ஓம் நிமலனே போற்றி
ஓம் நிர்வாணனே போற்றி 70

ஓம் நிறைவளிப்பவனே போற்றி
ஓம் நின்றருள்வோனே போற்றி
ஓம் பயங்கர ஆயுதனே போற்றி
ஓம் பகையழிப்பவனே போற்றி
ஓம் பரசு ஏந்தியவனே போற்றி
ஓம் பலிபீடத்துறைவோனே போற்றி
ஓம் பாபபட்சயனே போற்றி
ஓம் பால பைரவனே போற்றி
ஓம் பாம்பணியனே போற்றி
ஓம் பிரளயகாலனே போற்றி 80

ஓம் பிரம்மசிரச்சேதனே போற்றி
ஓம் பூஷண பைரவனே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பூதப்ரேத நாதனே போற்றி
ஓம் பெரியவனே போற்றி
ஓம் பைராக்கியர் நாதனே போற்றி
ஓம் மல நாசகனே போற்றி
ஓம் மஹா பைரவனே போற்றி
ஓம் மணிஞானனே போற்றி
ஓம் மகர குண்டலனே போற்றி
ஓம் மகோதரனே போற்றி 90

ஓம் மார்த்தாண்ட பைரவனே போற்றி
ஓம் முக்கண்ணனே போற்றி
ஓம் முக்தியருள்வோனே போற்றி
ஓம் முனீஸ்வரனே போற்றி
ஓம் மூலமூர்த்தியே போற்றி
ஓம் யமவாதனை நீக்குபவனே போற்றி
ஓம் யாவர்க்கும் எளியவனே போற்றி
ஓம் ருத்ரனே போற்றி
ஓம் ருத்ராக்ஷதாரியே போற்றி
ஓம் வடுக பைரவனே போற்றி 100

ஓம் வடுகூர் நாதனே போற்றி
ஓம் வடகிழக்கருள்வோனே போற்றி
ஓம் வடைமாலைப்பிரியனே போற்றி
ஓம் வாரணாசி வேந்தே போற்றி
ஓம் வாமனர்க்கருளியவனே போற்றி
ஓம் விபீஷண பைரவனே போற்றி
ஓம் வீழாமல் காப்பவனே போற்றி
ஓம் விரும்பியதை அருள்வோனே போற்றி 108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. சண்டேசுவரர்

## ஸ்ரீ சண்டிகேசுவரர் அர்ச்சனை - 108

ஓம் அருள்வடிவே போற்றி
ஓம் அபய வரதனே போற்றி
ஓம் அந்தணனே போற்றி
ஓம் அனுகூலனே போற்றி
ஓம் அகந்தையழிப்பவனே போற்றி
ஓம் அகத்துளாழ்ந்தவனே போற்றி
ஓம் அன்பர்க்கெளியவனே போற்றி
ஓம் அரவப்புரியோனே போற்றி
ஓம் ஆதிசிவன் வடிவே போற்றி
ஓம் ஆதிசண்டேசுவரனே போற்றி 10

ஓம் இடையனே போற்றி
ஓம் இனியவனே போற்றி
ஓம் இடையூறு களைபவனே போற்றி
ஓம் இறையருள் கூட்டுவிப்பவனே போற்றி
ஓம் ஈராறு கண்ணனே போற்றி
ஓம் ஈசானத்தமர்ந்தவனெ போற்றி
ஓம் உத்தமனே போற்றி
ஓம் உபகாரனே போற்றி
ஓம் உறுதுணையே போற்றி
ஓம் உட்பிரகாரத்திருப்போனே போற்றி 20

ஓம் எளியவனே போற்றி
ஓம் எச்சதத்தன சேயே போற்றி
ஓம் ஐயனே போற்றி
ஓம் ஐயம் தீர்ப்பவனே போற்றி
ஓம் கஜவாகனனே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கமண்டலதாரியே போற்றி
ஓம் கலியில் இருகரனே போற்றி
ஓம் கரியுரியணிந்தவனே போற்றி
ஓம் களங்கமிலானே போற்றி
ஓம் காச்யப கோத்ரனே போற்றி 30

ஓம் கிருபாநிதியே போற்றி
ஓம் கிருதயுகத்து பதினாறுகரனே போற்றி
ஓம் கும்பிடுங்கையனே போற்றி
ஓம் குற்றம் பொறுப்போனே போற்றி
ஓம் கொன்றைப்பிரியனே போற்றி
ஓம் கோரட்சகனே போற்றி
ஓம் சங்குநிறனே போற்றி
ஓம் சடைமுடியனே போற்றி
ஓம் சச்சிதானந்தனே போற்றி
ஓம் சண்டீசன் ஆனவனே போற்றி 40

ஓம் சாந்தரூபனே போற்றி
ஓம் சாயுஜ்யம் அளிப்பவனே போற்றி
ஓம் சிவபக்தனே போற்றி
ஓம் சிவகண நாயகனே போற்றி
ஓம் சிவபாலனே போற்றி
ஓம் சிங்க வாகனனே போற்றி
ஓம் சிவபூஜைப்பிரியனே போற்றி
ஓம் சிவப்பிரசாதம் ஏற்போனே போற்றி
ஓம் சிவனருள் பெற்றவனே போற்றி
ஓம் சிவாலயத்தேவனே போற்றி 50

ஓம் சிரஞ்சீவியே போற்றி
ஓம் சிவனிடமிட்டுச்செல்வோனெ போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சுருதிப்பிரியனே போற்றி
ஓம் சூலதாரியே போற்றி
ஓம் சூழ்வினையறுப்பவனே போற்றி
ஓம் சேய்ஞலூரானே போற்றி
ஓம் ஞானியே போற்றி
ஓம் ஞாலக்காவலே போற்றி
ஓம் தவசியே போற்றி
ஓம் தனித்திருப்போனே போற்றி 60

ஓம் தயாபரனே போற்றி
ஓம் தனிச்சன்னதியுளானே போற்றி
ஓம் தாதைதாள் தடிந்தவனே போற்றி
ஓம் துவாபரத்து நாற்கரனே போற்றி
ஓம் தியானேஸ்வரனே போற்றி
ஓம் திரேதாயுகத்தெண்கரனே போற்றி
ஓம் தெற்கு நோக்கனே போற்றி
ஓம் தேஜோ ரூபியே போற்றி
ஓம் நாற்கரனே போற்றி
ஓம் நாயனாரானவனே போற்றி 70

ஓம் நடனஸ்ரூபனே போற்றி
ஓம் நாடகப்படுபவனே போற்றி
ஓம் நல்வழிப்படுத்துபவனே போற்றி
ஓம் நால் வடிவினனே போற்றி
ஓம் நித்தியனே போற்றி
ஓம் நிர்மலனே போற்றி
ஓம் நீறணிந்தவனே போற்றி
ஓம் நிறைவளிப்பவனே போற்றி
ஓம் ப்ரம்மச்சாரியே போற்றி
ஓம் ப்ரம்ம ஞானியே போற்றி 80


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ப்ரசண்டனே போற்றி
ஓம் பரசு ஏந்தியவனே போற்றி
ஓம் பவித்ரனே போற்றி
ஓம் பவித்தை குமாரனே போற்றி
ஓம் பத்மாசனனே போற்றி
ஓம் பதமளிப்பவனே போற்றி
ஓம் புனிதனே போற்றி
ஓம் பூஜைபலன் அருள்வோனே போற்றி
ஓம் பெரியவனே போற்றி
ஓம் பேரருளாளனே போற்றி 90

ஓம் மண்ணிக்கரைமணியே போற்றி
ஓம் மறையோருள் மாணிக்கமே போற்றி
ஓம் முக்கண்ணனே போற்றி
ஓம் முன்னிலையறிந்தோனே போற்றி
ஓம் மோனனே போற்றி
ஓம் மோட்சமளிப்பவனே போற்றி
ஓம் ரிஷபவாகனனே போற்றி
ஓம் ரட்சிப்பவனே போற்றி
ஓம் ருத்ராம்சனே போற்றி
ஓம் ருத்ராட்சமணிந்தவனே போற்றி 100

ஓம் வழித்துணையே போற்றி
ஓம் வரமருள் தேவனே போற்றி
ஓம் வித்தகனே போற்றி
ஓம் விசாரசர்மனே போற்றி
ஓம் வில்வப்பிரியனே போற்றி
ஓம் வீடளிப்பவனே போற்றி
ஓம் சர்வோபகாரனே போற்றி
ஓம் சண்டிகேசுவரனே போற்றி 108


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

திருச்சிற்றம்பலம்

அன்னை அன்னை அன்னை அன்னை அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் அந்த ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சை யாவும் ஊட்டிவிக்கும் சிற்பவைக்கு மங்களம்
உருகாத நெஞ்சம் உன்பால் உருகிற்ற உருக்கத்தாலும்
பெருகாத கண்ணீர் பெருக்கிற்ற பெருக்கால் முன்னம்
சருகாத ஞானம் பூத்துத் தழைத்தின்ப கனியாய்க் காண
பருகாத மருதத் தேனை பருகினேன் பயன்பெற்றேனே
எப்பிறப்பும் எய்தேனோ இயற்கையான சித்தியை
இப்பிறப்பில் என்கரத்திசைந் தளிக்கும் சக்தியாம்
பஞ்சபூத பேதமாய் பிரபஞ்சமாய் ப்ரசண்டமாய்
விஞ்சினாள் எனக்கு யோகவீரளத்த தன்மையால்
தாழ்விலாத தன்மையும் தளர்ச்சியற்ற வன்மையும்
வாழ்வினால் பயன்களும் என்வாக்கிலே வரங்களும்
பக்தியில் கசிந்தளித்து பாடுகின்ற பான்மையும்
பாடுவோர்க்கு அனேகபோக பாக்கியங்கள் மேன்மையும்
என்றும் ஓங்க என்கரத்தியற்கையான சித்தியை
தந்துஞான மூர்த்தியாய் தணித்து வைக்கும் சக்தியாம்
நாமகீர்த்தனம் பரந்து நாடெலாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெலாம் விளங்கவும்
ஞானதீப மேற்றி என்றும் நாமகீதம் பாடுவோம்.
தர்மசக்தி வாழ்கவென்று சந்ததம் கொண்டாடுவோம். (அன்னை)
வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

*இரத்தினபுரி உறையும் கைலை நாதனே வாழ்க!*
கையிலை மலை உறையும் கயிலை மலையானே வாழ்க!
மலையகத்துறையும் திருக்கைலைவாசனே வாழ்க! வாழ்க!
திருப்பெருந்துறையுறையும் சிவனே வாழ்க!
ஆவடுதுறையுறையும் அண்ணலே வாழ்க!
திருவானைக்கா எழுந்தருளும் எம்பெருமானே வாழ்க!
எங்கும் நிறைந்திருக்கும் எம் ஈசனே வாழ்க! வாழ்க!
இரத்தினபுரியுறையும் இரத்தினேஸ்வரரே வாழ்க! வாழ்க!
ஈழமணித் திருநாடு சிறந்து வாழ்க!
சைவத்தமிழ் பண்பாடு சிறப்புடன் வாழ்க!
சீரோங்கும் சிவனடியாரும் வாழ்க! வாழ்க!

திருச்சிற்றம்பலம்

**வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.**



### ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே

வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே
பழுத்த அடியவருடன் தம்பிமாரே
பாடிப் பணிய வேண்டும் தம்பிமாரே
மூப்புவந்து அடையமுன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டும் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற் பொருள் தேடவேண்டாம் தம்பிமாரே
ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள் காணும் தம்பிமாரே
ஓதியுணர வேண்டும் தம்பிமாரே
உய்யவழி அதுகாணும் தம்பிமாரே
சாதி சமயபேதம் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே
வாழி வாழி சிவன் நாமம் தம்பிமாரே
மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே
வாழிசிவன் அடியார்கள் தம்பிமாரே
மன்னவனும் செங்கோலும் தம்பிமாரே

- யோகர் சுவாமிகள் அருளியது -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமான அர்ச்சனை வழிபாடு

குறிப்பு :

அர்ச்சனை வழிபாடு செய்யும் ஒவ்வொருவரும், தமது பிறந்த நட்சத்திரத்தையும், பெயரையும் தாமே கூறி வழிபாடு செய்ய வேண்டும். வழிபாடு செய்ய எண்ணுகின்ற மூர்த்தியின் முன்னின்று தனது உயிருக்கு ஒப்பானதாக ஒரு ரூபாவோ அல்லது இயன்ற பணத்தை மூர்த்தியின் பாதத்தில் வைக்க வேண்டும். அந்த மூர்த்தியின் நாமத்தை (16, 21, 27, 54, 108......, 1008) கூறி புஸ்பங்களை மூர்த்தியின் திருப்பாதத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதே நேரம் மூர்த்திக்குரிய தோத்திரங்களைப் பாடி புஸ்பங்களை சமர்ப்பிக்கலாம். இறுதியாக கற்பூர பஞ்சார ஆர்த்தியை காண்பி அர்ச்சனை வழிபாட்டை நிறைவாக்கலாம். இவ்வாறு வழிபாடு செயது இறைவன் திருவருளை பெற்றுக்கொள்வது அதி உத்தமமானது என்பதை அறியத்தருகின்றோம்.

சுவாமி அறையில் இவ்வாறு வழிபாடு செய்யலாம். படத்திற்கோ அல்லது விக்கிரகத்திற்கோ சாமி அறையில் செய்வதில் தவறில்லை. ஆலயங்கிளில சிவாச்சாரியாரிடம் தங்கள் பெயர் நட்சத்திரங்களை கூறி அர்ச்சனைப் பொருட்களை ஒப்படைத்து விட்டு நிற்பதால் நூறு வீத பலனை பெற முடியாது. தாங்களும் மேலே குறிப்பிட்டவாறு சுயமாக பெயர் நட்சத்திரங்களையும் இறைவனது நாமத்தையும் கூறுவதால் இறைவனின் முழுப்பலனையும் பெறமுடியும்.

## உசாத்துணை நூல்கள்

01. தமிழ் அர்ச்சணை மாலை
02. நமச்சிவாய மாலை
03. சிவ வழிபாடு
04. கவசத்திரட்டு
05. முருக வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.SUMUKALINGHAM
JUSTICE OF THE PEACE
Regd. No.03/09/NE/JA/P/171
"SABAREESHA VASAM"
KILUVAANA LANE
KOPAY CENTER KOPAY

.SUMUKALINGHAM
JUSTICE OF THE PEACE
Regd. No.03/09/NE/JA/P/171
"SABAREESHA VASAM"
KILUVAANA LANE
KOPAY CENTER KOPAY

.SUMUKALINGHAM
JUSTICE OF THE PEACE
Regd. No.03/09/NE/JA/P/171
"SABAREESHA VASAM"
KILUVAANA LANE
KOPAY CENTER KOPAY

.SUMUKALINGHAM
JUSTICE OF THE PEACE
Regd. No.03/09/NE/JA/P/171
"SABAREESHA VASAM"
KILUVAANA LANE
KOPAY CENTER KOPAY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்திநேஸ்வரம்



## சிவன் கோவில் - இரத்தினபுரி

## ஆலய நிர்வாக சபை 2016.07.30

ஆயுட்கால நம்பிக்கை பொருப்பாளர்
திரு. செந்தில்வேலர் அவர்கள்

தர்மகர்த்தா :- திரு.S.சரவணபவன் அவர்கள்

**சிவநெறி மலர சிவப்பணி புரிந்த சைவசமய நிறுவனங்கள், சைவாலயங்கள், நிறுவனம் சார் கௌரவ சேவையாளர்கள் அனைவருக்கும் இரத்திநேஸ்வரர் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | S.கணேகேஸ்வரன் | 077-3525897 |
| செயலாளர் | V.கீர்த்தி | 072-6236697 |
| பொருளாளர் | P.கருப்பையா (இராமகிளி) | 077-7537063 |
| உபதலைவர் | P.சிவாஜி | 071-2644266 |
| உபதலைவர் | M.சிவகுமார் | 071-5126604 |
| உபசெயலாளர் | S.விநோதன் | 071-4408844 |
| உபபொருளாளர் | T.துரைசிங்கம் | 071-4396491 |
| போஷகர் | R.இராமநாதன் | 077-3032728 |
| ஆலோசகர்கள் | M.நகுலேஸ்வரன் | 071-7777609 |
| ஆலோசகர்கள் | P.R.S.குமரா | 077-7260714 |
| உறுப்பினர்கள் | R.சௌத்ரி | 071-4468950 |
| உறுப்பினர்கள் | S.மகேந்திரகுமார் | 071-9888745 |
| உறுப்பினர்கள் | K.நந்தகுமார் | 071-2220729 |
| உறுப்பினர்கள் | S.சுதர்ஷன் | 071-6140926 |
| உறுப்பினர்கள் | K.தினேஸ்பிரசாத் | 077-4409271 |
| உறுப்பினர்கள் | D.மகேந்திரன் | 075-5427747 |
| உறுப்பினர்கள் | P.கணேஸ் | 077-8497770 |
| உறுப்பினர்கள் | K.சுபாஸ்சந்திரன் | 075-8631217 |
| உறுப்பினர்கள் | M.P.பத்திராஜா வசந்பிள்ளை | 071-5781781 |
| உறுப்பினர்கள் | R.ரமேஸ்ராஜா (பிரனாப்) | 077-6378674 |
| உறுப்பினர்கள் | | |
| கணக்குபரிசோதகர்கள் | S.சசிந்திரபிரசாத் | 077-1993558 |
| கணக்குபரிசோதகர்கள் | A.சுரேஸ் | 071-6333302 |

**இரத்தினபுரி சிவன் கோவில் சைவபரிபாலன மகா சபை**
Sivan Kovil Ratnapura Saiva paripalana Maha Sabai
Accound No (C/A) :- 0075230303, Accound No (S/A) :- 77960633 Ratnapura BOC Branch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவநெறி மலர சிவப்பணி புரிந்த சைவசமய நிறுவனங்கள், சைவாலயங்கள்.

**இந்து சமூக அபிவிருத்தி ஒன்றியம்**
இரத்தினபுரி பிரதேச செயலகம், இரத்தினபுரி.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்**
அப்பர் வேவல்கெட்டிய ஹப்புகஸ்தென்ன, இரத்தினபுரி.

**ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானம்**
திருவானகெட்டடிய, இரத்தினபுரி.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்**
மாஹவளை, இரத்தினபுரி.

**விஸ்வகர்மா சேவா சங்கம்**
135/6 ஸ்ரீபாத மாவத்தை, இரத்தினபுரி.

**இந்து நற்பணி மன்றம்**
இல 48 வரக்காதொட்ட வீதி, இரத்தினபுரி.

Sivagajan Press
Kodikamam
077-7682131, 021-2050303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org